**செய்தி வெளியீடு எண்: 061** **நாள்: 23.01.2018**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (23.1.2018) தலைமைச் செயலகத்தில், 2016–ஆம் ஆண்டு கவுஹாத்தி மற்றும் ஷில்லாங்கில் நடைபெற்ற 12–வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், 2017–ஆம் ஆண்டு ஐஸ்லாண்ட் நாட்டு தலைநகர் ரிக்யவிக்கில் நடைபெற்ற மகளிர்க்கான உலகக் கோப்பை சாட்டிலைட் வாள்வீச்சு போட்டி ஆகிய போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 29 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் 21 பயிற்றுநர்களுக்கு 2 கோடியே 25 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடும் நோக்கில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பன்னாட்டு அளவிலும் அகில இந்திய அளவிலும், நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், சிறந்த விளையாட்டு வீரர்கள் மேலும் பல சாதனைகள் புரிய உதவித் தொகை வழங்குதல், பதக்கம் வெல்லும் வீரர்களின் பயிற்றுநர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2016–ஆம் ஆண்டு கவுஹாத்தி மற்றும் ஷில்லாங்கில் நடைபெற்ற 12–வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 28 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 1 கோடியே 92 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்கள் 21 பேருக்கு ஊக்கத் தொகையாக 28 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்;

2017–ஆம் ஆண்டு ஐஸ்லாண்ட் நாட்டின் தலைநகர் ரிக்யவிக்கில் (Reykjavik) நடைபெற்ற மகளிர்க்கான உலகக் கோப்பை சாட்டிலைட் வாள்வீச்சு

போட்டிகளில் (Women's World Cup Satellite Sabre Tournament) முதலிடம் பெற்ற வாள்வீச்சு வீராங்கனை செல்வி சி.ஏ.பவானி தேவிக்கு சிறப்பினமாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

என மொத்தம் 2 கோடியே 25 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 29 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் 21 பயிற்றுநர்களுக்கு வழங்கினார்கள்.

இந்திய பள்ளி விளையாட்டு குழுமத்தின் வாயிலாக (School Games Federation of India) பள்ளிகளுக்கான மாநில அளவில் சிறந்த ஸ்குவாஷ் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மகாராஷ்டிரா மாநிலம், ஔரங்காபாத்தில் கடந்த 5.12.2017 முதல் 9.12.2017 வரை நடைபெற்ற தேசிய அளவிலான குழு மற்றும் தனிநபர் பிரிவு ஸ்குவாஷ் விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு ஒட்டுமொத்த சாம்பியன் பதக்கங்களை வென்றது. இப்போட்டியில் பதக்கங்கள் வென்ற 25 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து தாங்கள் வென்ற கோப்பைகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி. ஜெயராமன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ,ப, ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 23.1.2018**